**செய்தி வெளியீடு எண்: 442** **நாள்: 10.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 9.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், கடந்த 23.3.2018 முதல் 30.3.2018 வரை சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசின் ஓராண்டு சாதனை விளக்க விழா மற்றும் கண்காட்சியில், சிறப்பாக அரங்குகள் அமைத்ததற்காக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு முதல் பரிசுக்கான கேடயத்தையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கு இரண்டாவது பரிசுக்கான கேடயங்களையும், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, வேளாண்மைத் துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய மூன்று துறைகளுக்கு மூன்றாம் பரிசுக்கான கேடயங்களையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசின் ஓராண்டு சாதனை விளக்க விழா மற்றும் கண்காட்சி, சென்னை கலைவாணர் அரங்கில் 23.3.2018 முதல் 30.3.2018 வரை நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை, காவல் துறை, மீன்வளத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை, பொதுப் பணித்துறை, பள்ளிக் கல்வித்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நலத்துறை, தகவல் தொழில் நுட்பவியல் துறை, உயர் கல்வித்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, எரிசக்தித் துறை, தொழில் துறை ஆகிய 27 அரசுத் துறைகள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்) மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகம் (தமிழ்நாடு உணவகம்) ஆகிய 2 அரசு சார்பு நிறுவனங்கள் பங்கேற்று, அரங்குகள் அமைக்கப்பட்டன. இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு, அரசின் ஓராண்டு சாதனை விவரங்கள் மற்றும் நலத்திட்டங்களை அறிந்து பயன்பெற்றனர்.

இக்கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்ததற்காக, முதல் பரிசு பெற்ற மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆகியோருக்கு முதல் பரிசுக்கான கேடயத்தையும்;

இரண்டாம் பரிசுகளை பெற்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., ஆகியோருக்கும்; நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அவர்களுக்கும் இரண்டாம் பரிசுக்கான கேடயங்களையும்;

மூன்றாம் பரிசுகளை பெற்ற கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன் மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., ஆகியோருக்கும்; வேளாண்மைத் துறை சார்பில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோருக்கும்; பொதுப்பணித் துறை சார்பில் பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., அவர்களுக்கும் மூன்றாம் பரிசுக்கான

கேடயங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் / முதன்மைச் செயலாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., நகர் ஊரமைப்பு ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு.சி. முனியநாதன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு. இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் திரு. எஸ்.பி. எழிலழகன் மற்றும் திரு. உல. ரவீந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.07.2018**